எடுத்து வருவதற்கு நீண்ட தூரம் இருக்கிறது. ஆகவே அதை எடுத்து வருகின்ற அந்த டிரான்ஸ்போர்ட் சார்ஜ்ஜஸ்—அதாவது போக்குவரத்துச் செலவு அதிகமாக ஆகிறது என்று சொன்னார்கள். ஆகவே தூரம் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், இந்த டிரான்ஸ்போர்ட்சார்ஜ்ஜஸ் என்று சொல்லக்கூடிய அந்தப்போக்குவரத்துச் செலவைக் குறைக்கவேண்டும் என்று மத்திய அரசை மாநில அரசு கேட்டிருக்கிறதா? இல்லை என்றால் இனிமேல் கேட்டு அதைக் குறைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தற்போது உள்ள நிலைமை நமக்கு சாதகமாக இருக்கக்கூடிய நிலைமை. அதாவது எவ்வளவு தூரம் என்பது முக்கியம் அல்ல. இந்திய அரசு அதற்கான கொள்கையை வகுத்து, ஆராய்ந்து இந்தியாவிலே எங்கே கிடைத்தாலும், இன்றைக்கு ஒரே விலைதான். ஆனால் அதை மாற்றவேண்டும் என்கிற முயற்சி நடக்கிறது. அதை எப்படி மாற்றப் போகிறார்கள் என்றால், இரும்பை அந்தந்த மாநிலங்கள் வாங்கிக் கொண்டு, போக்குவரத்துச் செலவை அவர்களே மேற்கொள்ள வேண்டும் என்று அதாவது ereight equalisation வேண்டாம் என்கிற ஒரு முயற்சி நடைபெறுகிறது. அந்த முயற்சியை எதிர்த்துத்தான் தமிழக அரசு வாதாடி வருகிறது. ஏற்கனவே உள்ள நடைமுறை இந்தியாவிலே நாம் எங்கே இரும்பு வாங்கினாலும் ஒன்று என்ற நிலைமைதான் இருக்கிறது. போக்குவரத்துக்கு என்று தனியாக செலவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

வு

அய்யம்பேட்டையில் உபமின் நிலையம்.

755—(*வினா எண். 6135): திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், பாபநாசம் தாலுக்கா, அய்யம்பேட்டை நகரில் உபமின் நிலைய வேலைகள் துவங்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வேலை துவங்கப்பெறும்?

(இ) அதன் மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) இதற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. பணிகள் விரைவில் துவங்கப்படும்.

30.413 லட்சம்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS